# தொகுத்தறி தேர்வு - டிசம்பர் 2023

-----

## வகுப்பு 6

காலம்: 2.00 மணி | தமிழ் | மதிப்பெண்கள்: 60

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** 5×1=5

1) இடமெல்லாம் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ...............

அ) இடம்+மெல்லாம் ஆ) இடம்+எல்லாம்
இ) இட+எல்லாம் ஈ) இட+மெல்லாம்

2) நாம் ............... சொல்படி நடக்க வேண்டும்.

அ) இளையோர் ஆ) ஊரார் இ) மூத்தோர் ஈ) வழிப்போக்கர்

3) பிறரிடம் நான் ............... பேசுவேன்.

அ) கடுஞ்சொல் ஆ) இன்சொல் இ) வன்சொல் ஈ) கொடுஞ்சொல்

4) வாழை+இலை என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ...............

அ) வாழையிலை ஆ) வாழை இலை இ) வாழைலை ஈ) வாழிலை

5) நிலையான செல்வம் ...............

அ) தங்கம் ஆ) பணம் இ) ஊக்கம் ஈ) ஏக்கம்

**ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக:** 2×1=2

6) காமராசரைக் 'கல்விக்கண் திறந்தவர்' என்று மனதாரப் பாராட்டியவர் ...............

7) பழையன கழிதலும் ............... புகுதலும்.

**இ) சொற்றொடரில் அமைத்து எழுதுக:** 3×1=3

8) ஏற்றுமதி

9) பொங்கல்

10) சீருடை

**ஈ) பொருத்துக:** 5×1=5

| | | |
|---|---|---|
| 11) விடிவெள்ளி | - | பஞ்சுமெத்தை |
| 12) மணல் | - | ஊஞ்சல் |
| 13) புயல் | - | போர்வை |
| 14) பனிமூட்டம் | - | வீடு |
| 15) கட்டுமரம் | - | விளக்கு |

**உ) ஏதேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்க:** 4×2=8

16) நாம் எதை நம்பி வாழக்கூடாது?

17) 'கண்மணியே கண்ணுறங்கு' பாடலில் இடம்பெற்றுள்ள மூன்று நாடுகள் யாவை?

18) போகிப் பண்டிகை எதற்காகக் கொண்டாடப்படுகின்றது?

19) ஆக்கம் யாரிடம் வழி கேட்டுச் செல்லும்?

20) நான்கு நிலங்கள் என்பன யாவை?

21) சிறுவணிகப் பொருட்கள் யாவை?

**ஊ) பின்வரும் மனப்பாடப் பாடலினை அடிபிறழாமல் எழுதுக:** 4+2=6

22) 'மன்னனும்' - எனத் தொடங்கும் மூதுரைப் பாடல்.

23) 'மோப்பக்குழையும்' என்னும் குறளினை அடிமாறாமல் எழுதுக.

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**எ) எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி:** 2×2=4

24) இன எழுத்துகள் என்றால் என்ன?

25) மயங்கொலி எழுத்துகள் யாவை?

26) சுட்டு எழுத்துகள் என்றால் என்ன? அவை யாவை?

**ஏ) ஏதேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க:** 3×3=9

27) காமராசரின் கல்விப்பணிகள் குறித்து எழுதுக.

28) ஆசாரக்கோவை கூறும் எட்டு வித்துகள் யாவை?

29) பொங்கல் விழாவின்போது உங்கள் ஊரில் என்னென்ன சிறப்பு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வீர்கள்?

30) தமிழனின் செயல்களாக முடியரசன் கூறுவன யாவை?

31) உங்கள் பகுதியில் நடைபெறும் தொழில்களைப் பட்டியலிடுக.

**ஐ) பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை எழுதுக:** 2×5=10

32) அண்ணா நூற்றாண்டு நூலகத்தைப் பற்றி சுருக்கமாக எழுதுக.

**(அல்லது)**

33) உழைப்பே மூலதனம் கதையினைச் சுருக்கி எழுதுக.

34) 'காமராசர்' - என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

**(அல்லது)**

35) பிறந்த நாள் பரிசு அனுப்பிய மாமாவுக்கு நன்றி தெரிவித்துக் கடிதம் எழுதுக.

**ஒ) பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க:** 4×2=8

36) **தமிழ் கலைச்சொல் எழுதுக:**

அ) Consumer ஆ) Welcome

37) **இடம் மாறியுள்ள சொற்களைச் சரிப்படுத்தி சரியான சொற்றொடரை எழுதுக:**

அ) முளையிலே விளையும் தெரியும் பயிர்.

ஆ) ஆக்குவோம் இல்லாமை கல்லாமையை.

38) **சரியான மயங்கொலி வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக:**

அ) வண்டி இழுப்பது ............ (காளை / காலை)

ஆ) பறவை வானில் ............ (பரந்தது / பறந்தது)

39) **பின்வரும் நவமணிகளை அகர வரிசைப்படுத்தி எழுதுக:**

நீலம், கோமேதகம், மாணிக்கம், வைரம், பவளம், வைடூரியம், முத்து, புஷ்பராகம், மரகதம்.

----------

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com